# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2042 (ஐப்பசி–கார்த்திகை) நவம்பர் 2011 ஏர்-26, உழவு-11, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
பரணி கே.பாலசுப்பிரமணி
"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744
செல் : 9381545452

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"தீரன் சின்னமலை மாளிகை"
72, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351744
Cell : 93821 55581

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

தலைவர் : பரணி கே.பாலசுப்பிரமணி
துணைத்தலைவர்கள் : கே.ஏ.கணபதி
பி.சென்னியப்பன்
செயலாளர் : ஆர். செல்வராஜ்
இணைச்செயலாளர்கள் : எஸ்.ஆர்.இராஜேந்திரன்
Dr.கே.ஆர்.பி.சண்முகம்
பொருளாளர் : கே.கே. ரமேஷ்
தணிக்கையாளர் : ஆர். பாலச்சந்திரன்

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| கே.ராஜாமணி | பி.அருள் |
| வி.பி.செங்கோட்டுவேல் | எம்.எஸ்.சங்மேஸ்வரன் |
| பி.கே.ஈஸ்வரமூர்த்தி | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| ஆர். சண்முகவேல் | எம்.அமராபதி |
| எம். கார்த்திக் | எஸ்.அன்பழகன் |
| வி.பி.வீரப்பன் | சி.சர்வராஜன் |
| ஆர்.இளங்கோ | எம்.எஸ்.ராஜேந்திரன் |
| பி.ரவி | கே.என்.தர்மராஜ் |
| Dr.டி.எஸ்.செல்வராஜ் | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| எஸ்.சிவசாமி | உத்தமிபொன்னுசாமி |

## இந்த இதழில்

| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| தலையங்கம் | - 2 |
| கட்டிட நிதி | - 3 |
| சங்க செய்தி | – 4 |
| அடையாள அட்டை விண்ணப்பம் | – 5 |
| என்னதெரியுமா ? | – 6 |
| நலமுடன் வாழ | – 9 |
| பாராட்டு விழா | – 11 |
| கொங்கு திருமண மாலை | – 13 |
| மணமகள் தேவை | - 15 |
| தகவல் மையம் | - 16 |
| கொங்கு வேளாண் சாதனையாளர் | - 17 |
| கொங்கு இளம் சாதனையாளர் | - 18 |
| அரசுத் தேர்வு | - 21 |
| மணமகள் தேவை | - 27 |
| மணமகன் தேவை | - 30 |
| திருத்தம் | - 32 |

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு,



வணக்கம், தமிழ்நாடெங்கும் உள்ளாட்சித் தேர்தல்கள் 17.10.2011 மற்றும் 19.10.2011 தேதிகளில் நடத்தப்பட்டு 21 ஆம் தேதியன்று முடிவுகள் அறிவிக்கப்பட்டன. 10 மாநகராட்சிகள், 125 நகராட்சிகள், 529 பேரூராட்சிகள், 31 மாவட்ட ஊராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 12,524 சிற்றூராட்சிகளுக்கு நேரடித்தேர்தல்கள் மூலம் 1,32,461 பேரும், மறைமுகத் தேர்தல்கள் மூலம் 14,020 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவியேற்றுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக உள்ளம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா வளர வேண்டுமென்றால் கிராமங்கள் வளர வேண்டும் என்றார் மகாத்மா காந்தி. இந்தியா விவசாய நாடு, இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் வாழ்கிறது என்றும் கூறுவர். எனவே கிராமங்களின் வளர்ச்சிக்கு ஊராட்சி மன்றப் பொறுப்பாளர்களின் பங்கு மிக முக்கியமானது. தேர்தல்களில் வேட்பாளர்கள் பெரும்பணம் செலவு செய்தது வருத்தமளிப்பதாக இருந்த போதிலும், இனி இவர்கள் அனைவரும் கட்சி பேதமில்லாமல், மக்கள் சேவை ஒன்றையே மகத்தான சேவையென்று கருதி, ஊழலுக்கும், சுயநலத்திற்கும் சிறிதும் இடம்கொடுக்காமல் பணியாற்ற வேண்டும் என்று நாடு நலம் பேணும் அனைவரும் எதிர்பார்க்கிறார்கள்.

அடிப்படை வசதிகளை முன்னுரிமை கொடுத்து மேம்படுத்த வேண்டும். சாலைவசதிகள், தெருவிளக்குகள், கழிப்பிட வசதிகள், சுத்தமான குடிதண்ணீர் போன்றவற்றிற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுப்பதோடு, மக்கள் குறைகளைக் கேட்டறிந்து அவற்றைப் போக்க தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் மக்கள் பயனடைவர். ஊரும், நகரும், நாடும் முன்னேறும். மக்கள் வாழ்த்துவர். வெற்றி வாய்ப்பைத் தொடர்ந்து வழங்குவர்.

உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கொங்குச் சொந்தங்களுக்கு சங்கம் சார்பாக சிறப்பு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மக்கள் நலம் பேணுவதிலும், ஊருக்காக உழைப்பதிலும் இவர்கள் விரைந்து செயல்படுவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தீரன் சின்னமலை மாளிகை நவீன வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் பயன்பாட்டிற்கு வந்துள்ளதை ஏற்கனவே தெரிவித்திருந்தோம். சங்க உறுப்பினர்கள் தங்கள் உறவினர்களிடமும், நண்பர்களிடமும் இது பற்றி எடுத்துரைத்து இந்த அரிய வாய்ப்பையும், வசதிகளையும் பயன்படுத்திக் கொள்ளச்செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

9.10.2011 அன்று தருமபுரியில் கொங்கு நண்பர்கள் சங்கம் புதியதாக துவக்கப்பட்டது. நமது சங்கத்தின் சார்பில் பொருளாளர் திரு. கே. கே. ரமேஷ், செயற்குழு உறுப்பினர்கள் திரு.வி.ஆர்.பாலசுப்பிரமணியன், திரு.எம்.அமராபதி மற்றும் திரு.பி.அருள் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர். தருமபுரி சங்கத்திற்கு நமது சங்கத்தின் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். துவக்க விழாவை சிறப்பாக நடத்திய நிர்வாகிகளுக்கு எனது பாராட்டுகளை உரித்தாக்குகின்றேன்.

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

நன்றி.

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 66,66,283 |
| 1430 | | M.வேணுகோபால் | 1,000 |
| 1431 | | ஆர்.சபாநாயகம் | 1,000 |
| 1432 | | சத்யா | 1,000 |
| 1433 | | எஸ்.உமா | 1,000 |
| 1434 | | ஜி.சுபஸ்ரீ | 1,000 |
| 1435 | 1165 | சிவசெல்வம் | 1,001 |
| 1436 | | எஸ்.தினேஷ் | 1,000 |
| 1437 | | சுதா | 1,000 |
| 1438 | | சி.அகிலா | 1,000 |
| 1439 | 1480 | கே.ராஜா | 1,000 |
| 1440 | | ஆர்.கனேசன் | 1,000 |
| 1441 | | எஸ்.இளங்கோ | 1,000 |
| 1442 | | சி.லோகநாதன் | 1,000 |
| 1443 | | டாக்டர். எஸ்.ராஜா | 1,000 |
| 1444 | | ஜி.வி.பிரகாசம் | 1,000 |
| 1445 | | எஸ்.ஜோதி | 1,000 |
| 1446 | | கே.பி.மாணிக்கம் | 1,000 |
| 1447 | | வி.சி.சென்னியப்பன் | 1,000 |
| 1448 | | பி.சுப்பிரமணியம் | 1,000 |
| 1449 | | கே.எஸ்.ஆறுமுகம் | 1,000 |
| 1450 | | கே.எஸ்.பெரியசாமி | 1,000 |
| 1451 | | வி.என்.அப்புகுட்டி | 1,000 |
| 1452 | | எஸ்.என்.குழந்தை | 1,000 |
| 1453 | | எஸ்.பிரியங்கா | 1,000 |
| 1454 | | ஆர்.நித்யபிரியா | 1,000 |
| 1455 | | எம்.காந்திமதி | 1,000 |
| | | மொத்தம் | 66,92,284 |

## உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புதியதாக அடையாள அட்டை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் தேவையான தகவல்களை செய்தி மடலில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி அடையாள அட்டை விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து அனுப்பும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

உறுப்பினர்கள் விரைந்து செயல்பட அன்புடன் வேண்டுகிறோம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

## சங்கச் செய்தி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இணையதள முகவரி மாற்றப்பட்டுள்ளது.

www.kongunanbargalsangam.com

உறுப்பினர்கள் இனிமேல் புதிய இணையதளத்தைப் பயன்படுத்தி சங்கச் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

அடையாள அட்டை விண்ணப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

**வெள்ளி விழா இல்லம்**

நெ.34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Membership No. / உறுப்பினர் எண் :

Name / பெயர் :

Father's Name / தகப்பனார் பெயர் :

Date of Birth / பிறந்த தேதி :

Edu. Qualification / கல்வித்தகுதி :

Occupation / தொழில் :

Koottam & Kula Deivam
கூட்டம் & குல தெய்வம் :

Photo

| Native Address<br>சொந்த ஊர் முகவரி | Present Address<br>தற்போதைய முகவரி | Office Address<br>அலுவலக முகவரி |
|---|---|---|
| Ph : | Ph : | Ph : |

Cell Number:

E-mail ID :

Family Details / குடும்ப விவரம்

| Name<br>உறுப்பினர் பெயர் | Date of Birty<br>பிறந்த தேதி | Relationship<br>உறவுமுறை | Education / Employment<br>படிப்பு / தொழில் | Blood Group<br>இரத்தப் பிரிவு | Land Line / Mobile<br>தொலைபேசி/கைபேசி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

குறிப்பு : தங்களைப் பற்றி மேலும் விபரங்களைத் தெரிவிக்க
விரும்பினால் அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பவும்.

Signature
கையொப்பம்

# பட்டா சிட்டா அடங்கல் என்றால் என்ன தெரியுமா?

– தொகுப்பு : திரு. பி.அருள், செயற்குழு உறுப்பினர்

சொத்துப் பரிமாற்றம் என்பது, ஏதோ இரு நபர்களுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கல் நிகழ்வாக மட்டும் இல்லாமல், அது நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய அளவுகோலாகப் பார்க்கப்படும் வகையில் முக்கியத்துவம் பெற்றுவிட்டது.

எனவேதான், இத்தகைய பரிமாற்றங்களுக்குச் சட்டப் பாதுகாப்பு அளிக்க, அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மன்னராட்சிக் காலத்தில் இருந்தே சொத்துப் பரிமாற்றங்களை ஆவணப்படுத்துவது தொடர்பான பணிகள் நடைபெற்றுள்ளன. கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், ஓலைச் சுவடிகள், காகிதங்கள் என, இதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களைப் போலவே, இதற்கான மொழி வழக்குகளும், காலந்தோறும் மாறிவந்துள்ளன. தொடர்ந்து மாறியும் வருகின்றன.

இதற்கான சட்டப் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக, 1864ம் ஆண்டு பதிவுத்துறை ஏற்படுத்தப்பட்டது. 1899ம் ஆண்டு இந்திய ஸ்டாம்ப் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து பதிவு சட்டம் 1908ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

இதில் உள்ள குறைபாடுகளைச் சரி செய்யும் வகையில், அடுத்தடுத்து பல்வேறு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பத்திரப்பதிவு தொடர்பான பணிகள் முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழகம் முழுவதும் உள்ள 574 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ஆண்டுக்கு சராசரியாக 1.5 கோடி பேர் வந்து செல்கின்றனர். இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 30 லட்சம் ஆவணங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

இவ்வாறு பதிவு செய்வதற்கு, ஆவணங்களை எழுதுவது என்பதே ஒரு முக்கியக் கட்டமாக உள்ளது. 30 ஆண்டுகள் முன்பு அனைத்துப் பிரிவு மக்களும் குறிப்பிட்ட சில பிரிவினரையே சார்ந்திருந்தனர். அரசு அங்கீகாரம் பெற்ற ஆவண எழுத்தர்கள் வரவை அடுத்து, இதில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் ஆவணங்கள் எழுதும் முறையிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

பொதுவாக, வீடு மனை வாங்கும் பலரும், அது தொடர்பான ஆவணங்களைப் பிறரிடம் அளித்தே சரி பார்க்கின்றனர். ஆனால், இந்த ஆவணங்களை வாங்குபவரும், விற்பவரும் முழுமையாகப் படிக்க வேண்டும் என்பதே வல்லுனர்களின் ஆலோசனையாக உள்ளது.

இத்தகைய ஆவணங்களை எழுதுவோர் வழக்கமாகப் பயன்படுத்தி வரும் வாசகங்களில் இடம் பெறும் குறிப்பிட்ட சில வார்த்தைகள் இன்னமும் புரியாதவையாகவே உள்ளன.

ஆவணங்களில் அடிக்கடி பயன்படுத்தப்படும் சில வார்த்தைகளும் அவற்றின் விளக்கங்களும் :

பட்டா : ஒரு நிலம் இன்னார் பெயரில் உள்ளது என்பதைக் குறிக்கும் வகையில் வருவாய்த்துறை அளிக்கும் சான்றிதழ்.

சிட்டா: குறிப்பிட்ட நிலத்தின் பரப்பளவு, அதன் பயன்பாடு, யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது என்பது தொடர்பான விவரங்கள் அடங்கிய வருவாய்த்துறை ஆவணம்.

அடங்கல் : நிலத்தின் பரப்பு, பயன்பாடு, கிராமத்தின் மொத்த நிலத்தில் இது எந்தப் பகுதியில் உள்ளது போன்ற விவரங்கள் அடங்கிய வருவாய்த்துறை ஆவணம்.

கிராம நத்தம் : ஒவ்வொரு கிராமத்திலும் குடியிருப்புப் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலம்.

கிராமதானம் : கிராமத்தின் பொதுப் பயன்பாட்டுக்காக நிலத்தை ஒதுக்குவது.

தேவதானம் : கோவில் பயன்பாட்டுக்காகக் குறிப்பிட்ட நிலத்தைத் தானமாக அளித்தல்

இனாம்தார் : பொது நோக்கத்துக்காக தனது நிலத்தை இலவசமாக அளித்தவரைக் குறிக்கப் பயன்படுத்தும் சொல்

விஸ்தீரணம் : நிலத்தின் பரப்பளவு, எல்லைகளைக் குறிப்பது

ஷரத்து : பிரிவு

இலாகா : துறை

கிரயம் : நிலத்தை ஒருவருக்கு விற்பனை செய்வதை ஆவணப்படுத்துதல்.

வில்லங்கச் சான்று : ஒரு நிலத்தை ஒருவருக்கு விற்பனை செய்த அதன் உரிமையாளர் அதனை மறைத்துவிட்டு, அதே நிலத்தை வேறு ஒருவருக்கு விற்பனை செய்வது மோசடி. இந்த விவரத்தை அறிந்து கொள்ள உதவும் பதிவுத்துறை ஆவணம்.

பல எண் : நில அளவை எண்.

இறங்குரிமை :வாரிசுரிமை,

தாய்ப் பத்திரம் : ஒரு குறிப்பிட்ட நிலம், இப்போதைய உரிமையாளருக்கு முன்னர் யாரிடம் இருந்தது என்பதை அறிய உதவும் முந்தைய பரிவர்த்தனை ஆவணங்கள்.

ஏற்றது ஆற்றுதல் : குறித்தவகை பொறுப்பை நிறைவேற்றித் தருவதற்கு உறுதி அளித்தல்

மேய்க்கால் நிலம் : மேய்ச்சல் பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிலம்

அனுபவ பாத்தியதை :நிலத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் உரிமை

சுவாதீனம் ஒப்படைப்பு : நிலத்தின் மீதான உரிமையை ஒப்படைத்தல்

ஜமாபந்தி : வருவாய்த் தீர்வாயம்

நன்செய் நிலம் : அதிக பாசன வசதி கொண்ட நிலம்

புன்செய் நிலம் : பாசனத் தேவைக்கு மழையை நம்பியுள்ள நிலம்

குத்தகை : ஒரு நிலத்தைப் பயன்படுத்தும் உரிமையை குறிப்பிட்ட காலத்துக்கு, சில நிபந்தனைகளுடன் அளிப்பது அல்லது பெறுவது,

இந்த வார்த்தைகளின் பயன்பாடு சமீபகாலமாக படிப்படியாகக் குறைந்து வருகிறது எனப் பதிவுத்துறையினர் தெரிவித்தனர்.

23 வகை மாதிரி ஆவணங்கள் தயார் :

ஒருவர் தன்னிடம் உள்ள சொத்தை, வேறு ஒருவருக்கு விற்பனை செய்வது தொடர்பான ஆவணங்களை எழுத மூன்றாவது நபர் ஒருவரைச் சார்ந்திருக்கும் நிலைமை மாற்ற வேண்டும் என நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வந்தது.

இதை ஏற்று சொத்து விற்பனை, அடமானம், ஒப்பந்தம், பொது அதிகார ஆவணம், ரத்து செய்யும் ஆவணம், தத்தெடுத்தல் தொடர்பான ஆவணம் உள்ளிட்ட 23 வகையான ஆவணங்களின் ஆங்கிலம் மற்றும் தமிழ் மாதிரி படிவங்களைப் பதிவுத்துறை வெளியிட்டுள்ளது.

பதிவுத்துறையின் www. tnreginet.net என்ற இணைய தளத்தில் இருந்து இவற்றை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து பெயர், முகவரி, சொத்து விவரங்களை மட்டும் பூர்த்தி செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

நன்றி : தினமலர்

❖❖❖❖❖

# என்றும் நலமுடன் வாழ

கொங்குமாமணி வி.எஸ். நடராஜன்

முதியோர் மருத்துவர்

## பெண்களுக்கு ஏற்படும் சிறுநீர்க் கசிவு

ஒரு வயதான தம்பதியினர் தங்களுக்கு ஏற்படும் தொல்லைகளைப் பற்றி முதியோர் மருத்துவ நிபுணரிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறார்கள். கணவரின் கேள்வி பின் வருமாறு :

கேள்வி – எனக்குத் திருமணம் ஆகி ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. எங்களுக்குள் எந்தக் கருத்து வேறுபாடுமின்றி ஒற்றுமையாகவே குடும்பம் நடத்தி வருகிறோம். அந்த ஒற்றுமையைப் போலவே எங்களுக்குள் நோயிலும் ஓர் ஒற்றுமை. என் மனைவி அதைப் பற்றிச் சொல்லத் தயங்குவதால் நானே அவள் சார்பாக எங்களின் தொல்லைகளை உங்களிடம் சொல்கிறேன். எனக்கு இரவில் சுமார் 4–5 முறை சிறுநீர் கழிக்க வேண்டி இருக்கிறது. சிறுநீர் கழித்த பின்பும் மறுபடியும் சிறுநீரைக் கழிக்க வேண்டும்போல் தோன்றும். என் மனைவிக்கோ, அவள் அதிகமாக இருமினால், தும்மினால் மற்றும் சிரித்தால் அவளை அறியாமலேயே சிறுநீர் கசிவு ஏற்படுகிறது. இதற்காக அவள் கூச்சப்பட்டுக் கொண்டு பல சமயங்களில் கல்யாணம், கோயில் விழா மற்றும் பல நிகழ்ச்சிகளில் அதிகமாகக் கலந்து கொள்வது இல்லை. எங்களின் தொல்லைகளுக்கு என்ன காரணம் ? இதற்குச் சிகிச்சை ஏதேனும் உண்டா ?

பதில் – வயதாகும் போது சிறுநீர் அடிக்கடி வருவதும், அதைச் சில சமயங்களில் கட்டுப்படுத்த முடியாமல் போவதும் உண்டு. உடலளவிலும், மனதளவிலும் துன்புறுத்தும் இத்தொல்லையைப் பற்றிச் சற்று விவரமாகத் தெரிந்து கொள்வோம்.

பெண்களுக்கு அவர்கள் பயன்படுத்தும் மருந்துகள், செய்துகொண்ட அறுவை சிகிச்சையின் தன்மை மற்றும் உளவியல் ரீதியான காரணங்களால் கட்டுப்பாடு இல்லாமல் சிறுநீர் வெளியேறலாம். இதை முதுமையில் ஏற்படும் இயல்பான ஒரு செயல்தான் என்று நினைப்பது தவறு.

சிறுநீர்க் கசிவில் மூன்று வகைகள் உண்டு. அவை :

### 1. அழுத்த நீர்க்கசிவு (Stress Incontinence)

உடற்பயிற்சி செய்யும் போதும், இருமல், தும்மல் மற்றும் சிரிக்கும்போதும் சிறுநீர்ப்பையில் அழுத்தம் ஏற்பட்டு நிர்க்கசிவு ஏற்படலாம். பொதுவாக, சிறுநீர்ப்பையைச் சுற்றியுள்ள தசைகள் தளர்ந்து போயிருந்தால் இப்பிரச்னை ஏற்படும். அடிக்கடி குழந்தை பெற்றவர்களுக்கும், இடுப்புப் பகுதியில் காயம் அடைந்தவர்களுக்கும், பிறப்பு உறுப்புப் பகுதியில் அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களுக்கும் அழுத்த நீர்க்கசிவு ஏற்படலாம்.

**2. கட்டுப்படுத்த முடியாத நீர்க்கசிவு (Urge Incontinence)**

சிலர், கழிவறை செல்லும் வரைகூட சிறுநீரைக் கட்டுப்படுத்த முடியாமல் அவதிப்படுவார்கள், பக்கவாதம், மறதி நோய் மற்றும் பார்க்கின்ஸன்ஸ் நோயாளிகளுக்கு இந்தப் பிரச்னை இருக்கும். முதுமையில், முழங்கால் வலியால் அவதிப்படுபவர்களுக்கும் இப்பிரச்சனை காணப்படுவது இயல்பு.

**3. நிரம்பி வழியும் நீர்க்கசிவு (Overfolw Incontinence)**

ஆண்கள் ப்ராஸ்டேட் உறுப்பு விரிவடைந்தவருக்கும், நீண்டகால நீரிழிவு நோயாளிக்கும் சிறுநீர்ப்பையில் இருந்து சிறிது சிறிதாக நீர் கசிந்து கொண்டே இருக்கும்.

கேள்வி – சிறுநீர்க் கசிவுக்கு என்ன சிகிச்சை முறைகள் இருக்கின்றன?

**பதில்**

1. எடை அதிகம் உள்ள பெண்கள் தங்கள் எடையைக் குறைப்பது அவசியம்.

2. நாள்பட்ட மலச்சிக்கலினாலும் நீர்க்கசிவு ஏற்படலாம். அதற்குத் தக்க சிகிச்சை செய்து கொள்ள வேண்டும்.

3. ஆஸ்துமா, இருமல் மற்றும் சளி தொல்லைகளாலும் நீர்க் கசிவு ஏற்படும். அதற்கும் தக்க சிகிச்சைப் பெறுவது அவசியம்.

4. களிம்பு தடவுதல் – வயதான பெண்களுக்கு ஹார்மோன் குறைவினால் அடிக்கடி சிறுநீர்ப் போகும் தொல்லை ஏற்பட்டால் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோனைக் காலையிலும் மாலையிலும் நீர்த்தாரையிலும் மற்றும் பிறப்பு உறுப்புகளிலும் தடவி வந்தால் நல்ல குணம் ஏற்படும்.

5. உடற்பயிற்சி – பெண்களின் அடிவயிற்றுத் தசை, வலிமையடைய சிறப்பு உடற்பயிற்சி(Pelvic muscles exercises) செய்ய வேண்டும். அதாவது ஆசன வாயை இறுக்கி உள்ளே இழுத்து சிறிதுநேரம் கழித்து விடுதல். அதேபோல் சிறுநீரை அடக்கிக் கொள்ளுவது போல் செய்து சிறிதுநேரம் கழித்து விடுதல்.

இந்த இரண்டு பயிற்சிகளையும் ஒரே சமயத்தில் செய்யவேண்டும். சுமார் 20–30 தடவை இது போன்ற பயிற்சியைக் காலையிலும். மாலையிலும் செய்தால் சிறுநீர்க் கழிப்பது கட்டுக்குள் அடங்கும். இந்தச் சிகிச்சை முறை முக்கியமாக அழுத்த நீர்க்கசிவு உள்ளவர்களுக்கு நல்ல பலன் அளிக்கும்.

அறுவை சிகிச்சை – மேற்கண்ட சிகிச்சை முறைகளில் பலன் எதுவும் கிடைக்கவில்லையென்றால் சிறுநீர்த் தாரையில் செய்யும் அறுவை சிகிக்சை மூலம் நல்ல பயன்பெற முடியும். வயதான காலத்தில் அடிக்கடி சிறுநீர் செல்லுவதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து தக்க சிகிச்சை பெற்றுத் தொல்லையின்றி வாழலாம்.

❖❖❖❖❖

தொடரும்...

# கொங்குநாடு அறக்கட்டளை சார்பில் சென்னையில் பாராட்டு விழா

## மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் விழா



சென்னை கொங்குநாடு அறக்கட்டளையின் சார்பாக 09/10/2011 அன்று மருத்துவத் துறையில் உலகப் புகழ் பெற்று விளங்கும் மருத்துவர்கள் கோவை ஜெம் மருத்துவமனை நிறுவனர் சி.பழனிவேலு, சென்னை அப்போலோ மருத்துவமனை இதயநோய்ச் சிகிச்சை நிபுணர் கு.செங்கோட்டுவேலு, ஆகியோருக்குக் பாராட்டு விழா நடைபெற்றது.

அருட்செல்வர் பத்மபூசன் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்றார். முன்னதாக, செல்வி சௌமியா நடராசன் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்ப் பேரறிஞர் பெரியசாமி தூரன் அவர்கள் மகள் திருமதி சாரதாமணி சின்னசாமி அவர்கள் இறைவணக்கம் பாடினார். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்பமை கே.பி.கே.வாசுகி அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்து விழாவைத் தொடங்கி வைத்தார்.

மூத்த வழக்கறிஞர் இரா.காந்தி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். பாராட்டுப் பெறும் மருத்துவர்களை அறிமுகம் செய்து, பிரிசிசன் குழுமத்தின் தலைவர் திரு.கே.பாலசுப்பிரமணியன், மருத்துவர் எஸ்.அசோகன் ஆகியோர் உரையாற்றினர்.

பொருளாதார வசதி இல்லாத மாணவர்கள் பத்துப்பேருக்கு தலா இருபதாயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. பாராட்டுப்பெற்ற மருத்துவர்களையும், நிதி உதவி பெற்ற மாணவர்களையும் தமிழறிஞர் முனைவர் சிலம்பொலி செல்லப்பனார், மத்திய புலனாய்வுத் துறை முன்னாள் இயக்குனர் திரு.டி.ஆர்.கார்த்திகேயன் ஐ.பி.எஸ்., தமிழ்நாடு, எம்.ஜி.ஆர்.மருத்துவப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மேஜர்

டி.இராஜா, சக்தி மசாலா நிறுவனங்களின் நிறுவனர் திரு.பி.சி.துரைசாமி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத் தலைவர் திரு.பரணி கே.பாலசுப்பிரமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

விழாவில் மூத்த காங்கிரஸ் தலைவர் திரு.ஏ.கே.சண்முகசுந்தரம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சம்மேளனத் தலைவர் திரு.கே.ஏ.செங்கோட்டுவேலு, முன்னாள் வருமான வரித்துறை தலைமை ஆணையர் திரு.வி.எம்.சிவசுப்பிரமணியம், தமிழகக் காவல்துறை ஐ.ஜி.திரு.எம்.இரவி ஐ.பி.எஸ்., சதீஷ்கர் மாநில முன்னாள் தலைமை நீதிபதி திரு. ஏ.எஸ்.வெங்கடாசல மூர்த்தி, ஓய்வு பெற்ற காவல்துறை உயர் அதிகாரிகள் திரு.வி.சி.பெருமாள் ஐ.பி.எஸ்., திரு.நல்ல கோவிந்தசாமி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு உறுப்பினர் திரு.இரத்தின சபாபதி, நொய்யலாற்றுப் பாசன விவசாயிகளின் காவலர் திரு.ஆர்.பொ.கந்தசாமி, கொங்குநாடு முன்னேற்றக் கழகத் தலைவர் திரு.பெஸ்ட் எஸ்.இராமசாமி, புதுடெல்லி இந்திராகாந்தி திறந்தநிலை பல்கலைக்கழக முன்னாள் மண்டல இயக்குனர் டாக்டர் சௌந்தரவல்லி குழந்தைசாமி, தமிழ்நாடு அரசுத் தேர்வாணயக் குழு முன்னாள் உறுப்பினர் திரு.இரா.தமிழ்மணி, முன்னாள் கல்வித்துறை இயக்குநர் டாக்டர். சி.பழனிவேலு, CLRI சுற்றுச் சூழல் விஞ்ஞானி டாக்டர் இராஜாமணி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயலாளர் திரு.ஆர்.செல்வராஜ் மற்றும் சங்க முன்னோடிகள் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

கொங்குநாடு அறக்கட்டளை செயலாளர் திரு.கே.ஆர்.அப்பாவு, பொருளாளர் திரு.எஸ்.அருணாச்சலம், அறங்காவலர்கள் திரு.பி.முத்துசாமி, டாக்டர் மே.அ.வேலுச்சாமி, திரு.எம்.முருகேசன், திரு.ஏகே.வேங்கடசாமி, திரு.கே.ஏ.கணபதி, அறக்கட்டளை கணக்குத் தணிக்கையாளர் திரு.கே.பி.பொன்னுசாமி மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த சமுதாயப் பெருமக்கள் விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

விழாவில், சென்னை மலர் மருத்துவமனையில் பணியாற்றும் இதயநோய் நிபுணர் டாக்டர் சந்திரசேகர் அவர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டு, தலைவர் அருட்செல்வர் அவர்களால் கௌரவிக்கப்பட்டார். சமீபத்தில் டாக்டர் சந்திரசேகர் தமிழ்நாடு எம்.ஜி.ஆர்.மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சார்பாக வாழ்நாள் சாதனையாளராகவும், சிறந்த டாக்டராகவும் விருது பெற்றார். பொதுப்பணித்துறையில் பணியாற்றிய பொறியாளர் ஆறுமுகம் அவர்கள் அரசு மற்றும் தனியார் துறையில் கட்டிடக் கட்டுமானப் பணியில் ஆற்றிய சாதனைக்காக, விழா மேடைக்கு அழைக்கப்பட்டு, தலைவர் அருட்செல்வர் அவர்களால் கௌரவிக்கப்பட்டார். பாராட்டுப் பெற்ற மருத்துவர்கள், நிதிஉதவி பெற்ற மாணவர்கள் சார்பாக செல்வி தீபிகா ஆகியோர் ஏற்புரையாற்றினர்.

கொங்குநாடு அறக்கட்டளையின் செயலாளர் திரு.டி.கே.சுப்ரமணியன் நன்றியுரையாற்றினார். விழா நிகழ்ச்சிகளை திரு.எஸ்.பாலசுப்பிரமணியம் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

விழா முடிந்ததும் அனைவருக்கும் மதிய விருந்தளிக்கப்பட்டது.

❖❖❖❖❖

# கொங்கு திருமணமாலை - சென்னை

## மணமகள் தேவை:

கண்ணன் கூட்டம் – வயது –30, படிப்பு–B.E,MBA; USA- வில் வேலை செய்கிறார். நட்சத்திரம்– அவிட்டம்– பாதம் 3, உயரம்– 6 அடி, உடன் பிறப்பு, 1 சகோதரி மணமாகி USA வில் உள்ளார். தந்தை USA வில் சர்வதேச நிறுவனத்தில் வேலை செய்கிறார். பூர்வீகம் சேலம், சென்னையில் சொந்த வீடு உண்டு. பொறியியல் பட்டம் பெற்ற– சென்னை வாழ் குடும்பத்திற்கு முன்னுரிமை. தகுதியான பெண் தேவை.

## மணமகன் தேவை

முழுக்காதன் கூட்டம்– வயது 26, படிப்பு MBBS; USMLE உயரம் 5,7'' ஒரேபெண். பூர்வீகம் காங்கேயம். விசாகம் 4–ம் பாதம். தாய், தந்தை மருத்துவர்கள். சொந்தமாக மருத்துவமனை உள்ளது. USA வில் டாக்டராக உள்ள அல்லது USA வில் டாக்டருக்குப் படிக்கின்ற தகுதியான மணமகன் தேவை.

தொடர்புக்கு

**டி.கே. சுப்பிரமணியன்**
60 மேகசின் சாலை பட்ரோடு,
பரங்கிமலை, சென்னை – 600 016.
தொடர்பு எண்: 044– 22311411. 9840364348

❖❖❖❖❖

# வாழ்த்துகிறோம்

09.10.2011 ஞாயிற்றுக் கிழமை தருமபுரி மதுராபாய் சுந்தர ராஜாராவ் திருமண மண்டபத்தில் தருமபுரி கொங்கு நண்பர்கள் சங்க அறிமுகம் மற்றும் குடும்பவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை 9 மணிக்கு கேரள செண்டை மேளம் முழங்க விழா மண்டபம் நோக்கி சாரிசாரியாக தகடூர் கொங்குச் சொந்தங்கள் வரத் தொடங்கினர்.



சுமார் 1500 பேர் மிக உற்சாகமாகக் கலந்துகொண்ட இந்த இனிய விழாவில் மிக்க ஆர்வத்துடன் பங்கேற்ற சான்றோர்கள், தாய்மார்கள், சகோதரர்கள், சகோதரிகள், மாணவச் செல்வங்கள் ஆகியோரை சங்கத்தின் தலைவர் திரு. ஜி. வி. பிரகாசம் வரவேற்றார்.

சங்க அறிமுகம் மற்றும் அறிக்கையை செயலாளர் திரு. சி ஏ .டி. பழனிசாமி வாசித்தார். விழாவில், சிறந்த கல்விப் பணிக்காக தருமபுரி செந்தில் கல்வி நிறுவனங்கள் தாளாளர் திரு. செந்தில் சி. கந்தசாமி அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் பாராட்டு தெரிவிக்கப்பட்டு, கல்வி சாதனையாளர் விருது வழங்கப்பட்டது. சமுதாயப் பணியில் சிறந்து விளங்கியவர்களும், தத்தம் துறையில் சாதனை படைந்தவர்களும் பாராட்டு தெரிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

மாவட்ட அளவில் 2011 ஆம் ஆண்டு பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு அரசுத் தேர்வுகளில் 90 சதவீதத்திற்கு அதிகம் பெற்ற 80 மாணவ, மாணவிகளுக்கு பதக்கம், பணமுடிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டன.

பெங்களூரு பல்கலைக் கழகப் பேராசியர் சிறப்புரையாற்றினார். ஊத்தங்கரை ஸ்ரீ வித்யா மந்திர் கல்விக் குழுமத்தின் நிறுவனர் திரு. வி. சந்திரசேகரன், தொழிலதிபர் திரு. டி. உதயகுமார், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கப் பொருளாளர் திரு. கே. கே. ரமேஷ், சேலம் கொங்கு வேளாளர் அறக்கட்டளை செயலாளர் திரு. கே. பழனிசாமி மற்றும் ஒசூர் தணிக்கையாளர் திரு. சிஏ . பி. மணி வாழ்த்துரை வழங்கினர்.

ஆரூர் நம்பிப்பட்டி அன்னை கல்வி அறக்கட்டளை தலைவர் திரு ஆர். சுப்பிரமணியம் அவர்கள் மாணவர்களுக்கான பரிசுகளை அன்பளிப்பாக கொடுத்தார். விழாவிற்கான ஏற்பாடுகளை தலைவர் திரு . ஜி. வி. பிரகாசம், செயலாளர் திரு.சிஏ.டி. பழனிசாமி, பொருளாளர் திரு ஏ. அண்ணாமலை, துணைத்தலைவர்கள் திரு.ஏ.கணேசன், டாக்டர். வி.புத்தன், இணைச்செயலாளர்கள் திரு.எஸ்.செல்வராஜ், திரு.எம்.ராஜேந்திரன், செயற்குழு உறுப்பினர்கள் திரு. பி. ராஜரத்தினம், திரு பி. தங்கவேல், திரு. ஆர். குமாரசாமி, திரு. டி. சண்முகம், திரு. ஜி.எஸ். இராமலிங்கம், திரு. எஸ்.எம். விஜயன், திரு.டி. சந்திரசேகரன், திரு. கே. தனசேகரன், திரு. எஸ். மாதேஸ்வரன், டாக்டர் கே. ரவிச்சந்திரன், திரு. என்.ஆர். பாலமுருகன், திரு. எஸ். இளங்கோ மற்றும் PRO திரு. ஜி. வேடியப்பன் ஆகியோர் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

மாணவர்களுக்குப் பரிசு வழங்கியும், சான்றோர்களுக்குப் பாராட்டு தெரிவித்தும் மிகச் சிறந்த விழாவை நடத்தியுள்ள தருமபுரி சங்கத்திற்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

❖❖❖❖❖

# மணமகள் தேவை

ஜாதகர் பெயர் : **S.P.** பிரபு

பிறந்த தேதி : 27-05-1986 செவ்வாய் ( அட்சய வருடம் - வைகாசி 12)

பிறந்த நேரம் : 03.50:00 AM (GMT 10:20:00 PM)

பிறந்த ஊர் : திருப்பூர்

ஜன்ம நட்சத்திரம் : பூராடம் பாதம் 4

ஜன்ம ராசி : தனுசு

ஜன்ம லக்னம் : மேஷம்

திதி : (கிருஷ்ண) சதுர்த்தி

தந்தை பெயர் : பன்னீர் செல்வம்.K

தாயார் பெயர் : P.திலகவதி

தந்தை தொழில் : கார்மெண்ட்ஸ் & டெக்ஸ்டைல்ஸ்

உடன் பிறப்பு : 1 தங்கை,திருமணமானவர், கரூர்.

கல்வி : MBA

தொழில் : கார்மெண்ட்ஸ் & டெக்ஸ்டைல்ஸ்

உயரம் / நிறம் : 5' .8" / சிவப்பு

குலம் / கோவில் : விளையன் குலம் / ஸ்ரீ செல்வ நயாகி அம்மன் - கீரனூர் ( காங்கயம்)

| | | | |
|---|---|---|---|
| | ராகு லக் | சூரி புத | சுக் |
| குரு | ராசி | | |
| | | | |
| சந் செவ் மாந் | சனி | கேது | |

| | | | |
|---|---|---|---|
| | சூரி | புத குரு ராகு | லக் |
| | நவாம்சம் | | மாந் |
| சுக் | | | |
| செவ் | சந் கேது | சனி | |

ஜனன கால தசை இருப்பு : சுக்கிரன் 2 வருடம் 3 மாதம் 21 நாள்

குறிப்பு:

- பெண்ணின் ஜாதகத்தில் ராகு + கேது இருக்க வேண்டும்.
- பொருத்தம் வர கூடிய பெண்ணின் நஷ்சத்திரங்கள்: திருவாதிரை, புனர்பூசம் 1,2,3, பாதம், மிருகசீரிஷம் 2,3, பாதம், அஸ்வினி மற்றும் ரேவதி
- பெண்ணின் ஜாதகத்தில் இருக்க கூடாதவைகள்:
  செவ்வாய் தோசம் / பரணி, பூரம், பூராடம், அனுசம், பூசம், உத்திரட்டாதி, மூலம், ஆயில்யம் மற்றும் கிருத்திகை நஷ்சத்திரங்கள் இருக்க கூடாது..

தொடர்புக்கு : 94 88 10 10 10 / 9 44 22 38 139

E-mail: konguculture@gmail.com

# கொங்கு வேளாளர் திருமணத் தகவல் மையம்

**ஜாதகம் பதிவு செய்யத் தேவைப்படும் சான்றிதழ்கள் :**

- ஜாதிசான்றிதழ் நகல் (அல்லது) பள்ளிசான்றிதழ் (TC)
- ஜாதகக் குறிப்பு, பாஸ்போர்ட் சைஸ் போட்டோ 2, ரேஷன் கார்டு நகல்
- ஜாதகப் பதிவு கட்டணம் ரூ. 300/- (ஒரு வருட காலத்திற்கு மட்டும்).

**ஜாதகப் பதிவாளர் கவனத்திற்கு :**

- ஜாதகப் பதிவு அனைத்து நாட்களிலும் செய்யப்படும்.
- காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை செய்யப்படும்.
- ஜாதக நகல் மற்றும் விலாசம் அனைத்து நாட்களிலும் வழங்கப்படும்.
- ஜாதகப் பொருத்தம் பார்த்த நகல் காண்பித்த பின்பு விலாசம் பெறவும்.
- வரும் பொழுது தவறாமல் அடையாள அட்டை கொண்டு வரவும்.
- திருமணம் உறுதி ஆனவுடன் தகவல் தெரிவிக்கவும்.
- திருமணத் தரகர் மற்றும் ஜோதிடர்களுக்கு அனுமதி இல்லை.
- ஜாதகப் பதிவாளர்கள் திருமணத் தகவல் மையத்திற்கு ஒத்துழைப்பு நல்கவும்.

குறிப்பு :


- கொங்கு வேளாளர் திருமணத் தகவல் மையத்தில் வெளியாகும் வரன்களின் குடும்ப விவரங்களை விசாரித்து திருமணத்தை முடிவு செய்வது பதிவாளர்களின் முழு பொறுப்பாகும்.
- திருமணத் தகவல் மையத்தின் நடைமுறைகள் சங்கத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்டது.

10, புத்தர் வீதி, சீதா கல்யாண மண்டபம் எதிரில், கோபிசெட்டிப்பாளையம்,
போன் : 04285-348190, E-mail : kongu.ttmgobi@gmail.com

ஜாதகம் நகல் ஒன்றுக்கு ரூ. 5, முகவரி நகல் ஒன்றுக்கு ரூ. 5/-

❖❖❖❖❖

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## திரு. எம். விக்னேஷ்

திரு. எம். விக்னேஷ், நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், பி.ஜி. வலசு கிராமத்தைச் சேர்ந்த அமரர் திரு. பி. முத்துசாமி – திருமதி மரகதம் தம்பதியரின் மகனாவார்.

24 – வயது நிரம்பிய இவர், இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் மரபியல் துறையில் முனைவர் முதுநிலை பட்டப்படிப்பு ஆராய்ச்சியாளராக உள்ளார். முதுநிலை முனைவர் பட்டப்படிப்பு மேற்கொள்ள, இந்திய ஆராய்ச்சிக் குழுமம் 2010 ஆம் ஆண்டில் நடத்திய தேர்வில் அகில இந்திய அளவில் இரண்டாவதாகத் தேர்ச்சி பெற்று சாதனை படைத்தவர் இவர்.

தேசிய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் மூலம் 2011 ஆம் ஆண்டில் அகில இந்திய வேளாண்மை விஞ்ஞானிகளைத் தேர்வு செய்வதற்காக நடத்தப்பட்ட தேர்வில் அகில இந்திய அளவில் முதலிடத்தைப் பெற்று மற்றுமொரு சாதனை படைத்தார் இவர். இந்திய அரசின் மத்திய வேளாண்மை அமைச்சகத்தின் கீழ் விஞ்ஞானியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவர், தனது 24 வது வயதிலேயே, அதுவும் முதல் முயற்சியிலேயே, இத் தேர்வினில் வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதுநிலை ஆராய்ச்சியின் வாயிலாக எட்டு ஆராய்ச்சி கட்டுரைகள், 5 பயிற்சி நூல்களில் அத்தியாயங்கள், இந்திய அளவிலான கருத்தரங்குகளில் 8 ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் 20 பொதுக்கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

இவருடைய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று சீனாவில் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவிருக்கும் 11–வது சர்வதேச மக்காச் சோளம் கருத்தரங்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அகில இந்திய வேளாண்மை விஞ்ஞானிகள் தேர்வில் முதலிடம்பெற்றுச் சாதனை படைத்து, கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள திரு. எம்.விக்னேஷ் அவர்களுக்கு சென்னை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு வேளாண் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது

❖❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வி பொன். சக்தி அம்பாலிகை

செல்வி சக்தி அம்பாலிகை கணக்குத் தணிக்கையாளர் திரு. கே.பி. பொன்னுசாமி – சென்னை கொங்கு நண்பர்கள் சங்கச் செயற்குழு உறுப்பினர் புலவர் உத்தமி பொன்னுசாமி ஆகியோரின் புதல்வி ஆவார். சொந்த ஊர் ஈரோடு மாவட்டம் வெள்ளகோவில் அருகில் உள்ள கருப்பன் வலசு ஆகும். சென்னை எத்திராஜ் கல்லூரியில் B.com. பட்டமும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் M.com. பட்டமும் பெற்றுள்ளதோடு, ACA படிப்பையும் முடித்துள்ளார். இவருடைய சகோதரர் பாலாஜி குகன், B.A., L.L.B. பட்டங்கள் பெற்றவர்.

சக்தி அம்பாலிகை பள்ளி, கல்லூரி நாட்களில் சிறந்த மாணவியாக விளங்கியதோடு அனைத்துப் பள்ளிகளுக்கிடையே நடைபெற்ற பேச்சு, பாட்டு, கட்டுரை, கவிதை ஆகிய போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளைப் பெற்றுள்ளார். தேவாரம், திருப்புகழ் தெளிவாகப் பயின்றவர்.


தன் எட்டாவது வயதில் நாட்டியக்கலா சக்கரவர்த்தினி k.J. சரசா அவர்களிடம் பரதநாட்டியம் பயில ஆரம்பித்து, அருட்செல்வர் கொங்கு மாமேதை நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் அரங்கேற்றம் நடைபெற்றது. நீதியரசர் சதாசிவம், திரு. வி.சி. பெருமாள் I.P.S., திருமதி மாலதி IAS, மூத்த வழக்கறிஞர் திரு.இரா. காந்தி, திரு.சக்தி ஏ.கே. வேங்கடசாமி, எழுத்தாளர் சிவசங்கரி முதலானோர் வாழ்த்துரை வழங்கினர்.

கிருஷ்ணகான சபா, கபாலி பைன் ஆர்ட்ஸ், கார்த்திக் பைன் ஆர்ட்ஸ், மியூசிக் அகாடமி, தியாக பிரம்ம சபா, பார்த்தசாரதி சபா, பிரம்மகான சபா, மைலாப்பூர் பைன் ஆர்ட்ஸ், கரூர் நாரதகான சபா போன்ற புகழ்பெற்ற சபாக்களில் 50க்கும் மேற்பட்ட பரதநாட்டிய நிகழ்ச்சிகளை மிக அருமையாகவும், சிறப்பாகவும் நடத்தி, பாரம்பரியமிக்க 'இந்து', தினகரன், தினத்தந்தி முதலான பத்திரிகைகள் உட்பட பலரது பாராட்டுகளைப் பெற்றுள்ளார். தொலைக்காட்சிகளில் பல முறை இடம் பெற்ற இவருடைய அற்புதமான நடன நிகழ்ச்சிகள் பலராலும் பெரிதும் பாராட்டப்பட்டன.

நாட்டிய மயூரி, சிறந்த நடனமணி, நாட்டிய யுவமணி ஆகிய பட்டங்களைப் பெற்று, பரத நாட்டியக் கலையில் இவர் முத்திரைப் பதித்து வருகிறார்.

கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்க்கும்வகையில் பரதநாட்டியக் கலையில் சிறந்து விளங்கும் செல்வி பொன். சக்தி அம்பாலிகை அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் என்.டி. ராகேஷ்குமார்

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிப்பாளையம் அருகில் உள்ள கலிங்கியம் கிராமத்தைச் சேர்ந்த தொழிலதிபர் திரு. வி.ஏ. தட்சிணாமூர்த்தி – திருமதி பூங்கோதை ஆகியோரின் மகனாகப் பிறந்தவர் 15வயது நிரம்பிய செல்வன் என்.டி. ராகேஷ்குமார்.

ஓதாளம் கூட்டத்தைச் சேர்ந்த இவர் அபார ஞாபக சக்தி கொண்டவர். செஸ் விளையாட்டில் மூன்றாவது வயது முதலே ஈடுபட்டு, அனைவரும் பாராட்டத்தக்க சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். கோபி பாரதி வித்யாலயா பள்ளியில் பயின்ற இவர் 10 ஆம் வகுப்பில் 500 க்கு 472 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். கணிதம், அறிவியல் இரண்டிலும் 100/100 வாங்கியுள்ளார்.

ஆறு வயது முதல் செஸ் போட்டிகளில் கலந்து கொண்டு வந்துள்ள இவர், 2002 ஆம் ஆண்டு தன்னுடைய ஏழாவது வயதிலேயே ஒரு போட்டியில் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்தார். இதுவரை 133 செஸ் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

2010–2011 ஆம் ஆண்டு 17 வயதிற்குட்பட்டவர்களுக்கான மாநில அளவிலான போட்டியில் கலந்து கொண்ட இவர், மாநிலத்தில் முதலிடம் பெற்று செஸ் சேம்ப்பியன் ஆகி சாதனை படைத்தார். மாநில அளவில் முதலாவது இடத்தை இரு முறையும், தேசிய அளவில் ஏழாவது இடத்தையும் பெற்றுள்ள இவர் சிங்கப்பூர் உள்பட பல வெளிநாடுகளில் நடந்த செஸ் போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசு பெற்றுள்ளார். ஆங்கிலத்தில் பல கவிதைகளை எழுதிப் பாராட்டுப் பெற்றவர். கிரிக்கெட் விளையாட்டிலும் வல்லவர்.

கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை தேடித்தரும் வகையில் செஸ் விளையாட்டில் சாதனை புரிந்துவரும் செல்வன் என்.டி.ராகேஷ்குமார் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது. செஸ் விளையாட்டில் மேலும் பல சாதனைகள் படைத்திட சங்கம் வாழ்த்துகின்றது.

❖❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் எஸ். தனுஷ்

சேலம் மாவட்டம் வெள்ளக்கல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பொறியாளர் திரு. எஸ். சுரேஷ் சென்னையில் இத்தாலியன் நிறுவனம் ஒன்றில் தென்மண்டல மேலாளராகப் பணிபுரிகிறார். இவருடைய மனைவி டாக்டர் விஜயா. இத்தம்பதியரின் 11 வயது மகன் செல்வன் எஸ். தனுஷ் ஆதம்பாக்கம் டி.ஏ.வி. பள்ளியில் படித்து வருகிறார்.

வேளச்சேரி சர்வதேச நீச்சல் வளாகத்தில், பயிற்சியாளர் திரு. வீரபத்திரன் அவர்களிடம் நீச்சல் பயிற்சி பெற்ற செல்வன் தனுஷ், தமிழ்நாட்டிற்கும், கொங்குச் சமுதாயத்திற்கும் பெரும் பெருமை சேர்க்கின்ற வகையில் நீச்சல் போட்டிகளில் கலந்து கொண்டு வியத்தகு சாதனைகள் பல நிகழ்த்தி பலரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்.

2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு தற்போது வரை இவர் பல்வேறு நீச்சல் போட்டிகளில் கலந்து கொண்டு பெற்றுள்ள பதக்கங்களின் எண்ணிக்கை கேட்போர் யாவரையும் மலைக்க வைக்கும். ஆம்! இவர் 125 பதக்கங்கள் பெற்று அசத்தியுள்ளார்.


மாவட்ட அளவில் 46 பதக்கங்களும், மாநில அளவில் 60 பதக்கங்களும், தென்னிந்திய அளவில் 11 பதக்கங்களும், தேசிய அளவில் 8 பதக்கங்களும் – ஆக மொத்தம் 125 பதக்கங்கள் பெற்று சாதனைகள் நிகழ்த்தியுள்ளார். தேசிய அளவில் இரண்டு புது சாதனைகளையும், மாநில அளவில் 6 புதிய சாதனைகளையும் நிகழ்த்தியுள்ளார். ஒன்பது முறை சேம்ப்பியன்ஷிப் (championship) விருதுகளைப் பெற்றுள்ளார்.

நுரையீரல் அலர்ஜிக்காக 5 வயதில் நீச்சல் பயிற்சியை ஆரம்பித்து, நீச்சல் போட்டிகளில் வியத்தகு சாதனைகள் பல புரிந்துள்ள செல்வன் எஸ். தனுஸ் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டி மகிழ்கிறது. மேலும் பல சாதனைகள் படைக்க சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

# 2010 ஆம் ஆண்டு 10–ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

## முதல் இடம்



| | |
|---|---|
| பெயர் | : ல.சிந்து |
| த/பெ | : A.R.லட்சுமணன் |
| ஊர் | : அக்கியம்பட்டி, நாமக்கல் |
| பள்ளி | : பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல் |
| மதிப்பெண் | : 492/500 |

## முதல் இடம்



| | |
|---|---|
| பெயர் | : பி.நந்தினி |
| தா/பெ | : P.பாப்பாத்தி |
| ஊர் | : பெருமாப்பட்டி |
| பள்ளி | : பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல் |
| மதிப்பெண் | : 492/500 |

## இரண்டாம் இடம்




| | |
|---|---|
| பெயர் | : வே.சுருதி |
| த/பெ | : வேலுச்சாமி |
| ஊர் | : கொங்கு நகர் காலனி, நாமக்கல் |
| பள்ளி | : பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல் |
| மதிப்பெண் | : 491/500 |
| சிறப்புத்தகுதி | : மாநிலத்தில் 5ம் இடம், மாவட்டத்தில் 3ம் இடம் |

## மூன்றாம் இடம்



| | |
|---|---|
| பெயர் | : ரா.ராகவி |
| த/பெ | : வே.ராஜீ |
| ஊர் | : கந்தபுரி, நாமக்கல் |
| பள்ளி | : பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல் |
| மதிப்பெண் | : 490/500 |
| சிறப்புத்தகுதி | : மாநிலத்தில் 6ம் இடம், மாவட்டத்தில் 4ம் இடம் |

## மூன்றாம் இடம்



| | |
|---|---|
| பெயர் | : வீ.விபிதா |
| த/பெ | : ரா.வீரப்பன் |
| ஊர் | : அலங்காநத்தம் பிரிவு, நாமக்கல் |
| பள்ளி | : பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல் |
| மதிப்பெண் | : 490/500 |
| சிறப்புத்தகுதி | : மாநிலத்தில் 6ம் இடம், மாவட்டத்தில் 4ம் இடம் |

## மூன்றாம் இடம்

| | |
|---|---|
| பெயர் | : ர.தீபிகா |
| த/பெ | : எஸ்.ரங்கசாமி |
| ஊர் | : முத்துகாப்பட்டி, நாமக்கல் |
| பள்ளி | : பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல் |
| மதிப்பெண் | : 490/500 |
| சிறப்புத்தகுதி | : மாநிலத்தில் 6ம் இடம், மாவட்டத்தில் 4ம் இடம் |

2010 ம் ஆண்டில் நடைபெற்ற 10 ம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் கொங்கு இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப்பாராட்டி, சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.


# 2010 ஆம் ஆண்டு 12–ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

## முதல் இடம்




| | |
|---|---|
| பெயர் | : R.சந்தியா |
| த/பெ | : R.ராசப்பன் |
| ஊர் | : பொன் நகர், கொந்தளம், நாமக்கல் |
| பள்ளி | : விவேகானந்தா மேல்நிலைப்பள்ளி, நாமக்கல் |
| மதிப்பெண் | : 1186/1200 |
| சிறப்புத் தகுதி | : மாநில அளவில் இரண்டாம் இடம் |

## இரண்டாம் இடம்




பெயர் : S.மனோபிரவீன்
த/பெ : M.சிவகாமணி
ஊர் : கொல்லப்பட்டி, நாமக்கல்
பள்ளி : வித்ய விகாஷ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
மதிப்பெண் : 1185/1200
சிறப்புத் தகுதி : மாநில அளவில் மூன்றாம் இடம்



பெயர் : T.சுருதி
த/பெ : சா.திருமூர்த்தி
ஊர் : தமிழ் நகர், ஈரோடு
பள்ளி : பி.வி.பி. மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு
மதிப்பெண் : 1181/1200

## மூன்றாம் இடம்



பெயர் : M.சிபிசெந்தூர்
த/பெ : ஆர்.முத்துசாமி
ஊர் : கணபதிபாளையம், ஈரோடு
பள்ளி : பி.வி.பி. மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு
மதிப்பெண் : 1180/1200

**2010 ம் ஆண்டில் நடைபெற்ற 12 ம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் கொங்கு இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப் பாராட்டி, சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.**

## 2011 ஆம் ஆண்டு 10–ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

## முதல் இடம்



பெயர் : ச.சங்கீதா
த/பெ : கு.சக்திவேல்
ஊர் : பேட்டையார்தோட்டம், சேலம்
பள்ளி : முத்தமிழ் மேல்நிலைப்பள்ளி சேலம்
மதிப்பெண் : 496/500
சிறப்புத்தகுதி : மாநிலத்தில் 1ம் இடம் (State Board)

## இரண்டாம் இடம்



பெயர் : சு.ஹர்ஷினிஸ்ரீ
த/பெ : M.K.சுந்தரம்
ஊர் : முனிசிபல் காலனி, ஈரோடு
பள்ளி : பாரதி வித்யபவன் மெ.மே.பள்ளி, திண்டல்
மதிப்பெண் : 493/500
சிறப்புத்தகுதி : மாநிலத்தில் 1ம் இடம் (Metric)



பெயர் : ம.அனிதா
த/பெ : கே.மணி
ஊர் : போலீஸ் குடியிருப்பு, தருமபுரி
பள்ளி : செந்தில் மெட்ரிக் மேல்நிலை பள்ளி, தருமபுரி
மதிப்பெண் : 493/500
சிறப்புத்தகுதி : மாநிலத்தில் 1ம் இடம் (Metric)

பெயர் : மா.தரணிதரன்
த/பெ : மாதேஸ்வரன்
ஊர் : அவல்பூத்துறை, ஈரோடு
பள்ளி : நவரச மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு
மதிப்பெண் : 492/500
சிறப்புத்தகுதி : மாநிலத்தில் 2 ம் இடம் (Metric)

## மூன்றாம் இடம்



பெயர் : அ.காவியா
த/பெ : எஸ்.அய்யாசாமி
ஊர் : சித்தேஸ்வரா நகர், தருமபுரி
பள்ளி : செந்தில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தருமபுரி
மதிப்பெண் : 490/500
சிறப்புத்தகுதி : மாநிலத்தில் 4ம் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | ப.ஹேமலதா |
| த/பெ | : | ஆர்.பரமசிவம் |
| ஊர் | : | விளக்கேத்தி, ஈரோடு |
| பள்ளி | : | எஸ்.எஸ்.வி.மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | 490/500 |


2011 ம் ஆண்டில் நடைபெற்ற 10 ம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் கொங்கு இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப்பாராட்டி, சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

## 2011 ஆம் ஆண்டு 12–ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | L.S.தக்ஷிணி |
| த/பெ | : | சுப்பிரமணியம் |
| ஊர் | : | கொத்தமங்கலம், நாமக்கல் |
| பள்ளி | : | கிரீன் பார்க் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, நாமக்கல் |
| மதிப்பெண் | : | 1187/1200 |
| சிறப்புத் தகுதி | : | மாநில அளவில்3 வது இடம், மாவட்டத்தில் 1ம் இடம் |

### இரண்டாம் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | சா. தமிழ்செல்வன் |
| த/பெ | : | சாமிநாதன் |
| ஊர் | : | கருமாண்டி செல்லிபாளையம், ஈரோடு |
| பள்ளி | : | ஈரோடு இந்து கல்வி நிலையம் மெ.மே.நி.பள்ளி ஈரோடு |
| மதிப்பெண் | : | 1184/1200 |
| சிறப்புத் தகுதி | : | மாவட்டத்தில் 2வது இடம் |



பெயர் : S.ராஜேஸ்வரி
த/பெ : எம்.எஸ்.சுப்பிரமணியம்
ஊர் : ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி
பள்ளி : எஸ்.வி.மந்திர் மெ.மே.நி.பள்ளி
மதிப்பெண் : 1184/1200

பெயர் : ஆர். சேதுபதி
த/பெ : ரவிச்சந்திரன்
ஊர் : மொடக்குறிச்சி
பள்ளி : ஈரோடு இந்து கல்வி நிலையம் மெ.மே.நி.பள்ளி, ஈரோடு
மதிப்பெண் : 1184/1200

## மூன்றாம் இடம்



பெயர் : C.L.சொர்ணலதா
த/பெ : கே.எஸ்.லோகநாதன்
ஊர் : பொன்முத்து நகர், நல்லூர், திருப்பூர்
பள்ளி : செண்ட் ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திருப்பூர்
மதிப்பெண் : 1180/1200

**2011 ம் ஆண்டில் நடைபெற்ற 12 ம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் கொங்கு**

**இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப் பாராட்டி, சங்கம்**

**வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.**

❖❖❖❖❖